வணக்கம் நண்பர்களே...

இந்தப்பகுதி முற்றிலும் எட்டாவது தமிழ் சமச்சீர் புத்தகம் செய்யுள் பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட கேள்விகள் அடங்கிய தொகுப்பாகும். விடைகளும் ஒவ்வொரு பகுதியின் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு சில வினாக்கள் மட்டும் புத்தகத்தை தாண்டி வெளியில் இருந்து எடுக்கப்பட்டவை.

எனவே முதலில் நீங்கள் பாடப்புத்தகத்தை படித்து முடித்த பிறகு இந்தப்பகுதியில் உள்ள வினாக்களுக்கு பதில் அளித்து பழகுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எட்டாவது தமிழ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள செய்யுள் பகுதிகள்:

1) வாழ்த்து
2) திருக்குறள்
3) இனியவை நாற்பது
4) தமிழ்ப்பசி
5) திருவள்ளுவமாலை
6) நளவெண்பா
7) விவேகசிந்தாமணி
8) பாரதத்தாய்
9) திருமந்திரம்
10) தேம்பாவணி
11) கம்பராமாயணம்
12) விழுதும் வேரும்
13) திருவருட்பா
14) வில்லிபாரதம்
15) யார் கவிஞன்
16) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

அனைவரும் அனைத்து வினாக்களுக்கும் பதில் அளித்து பழகி வெற்றிப்பெற என் வாழ்த்துக்கள்

இப்படிக்கு

மீண்டும் உங்கள் ஆதரவுடன்

கோ.பழனி முருகன்

# எட்டாம் வகுப்பு தமிழ் - செய்யுள்

## 1) வாழ்த்து

1) தாயுமானவர் பிறந்த ஊர் எது?

A] வேளாங்கண்ணி

B] திருமறைக்காடு

C] மறைமலைநகர்

D] இராமநாதபுரம்

2) முத்தே பவளமே - எனத் தொடங்கும் பாடலானது தாயுமானவரின் நூலில் கீழ்க்கண்ட எந்த தலைப்பில் இருந்து இடம்பெற்றுள்ளது?

A] பராபரக்கண்ணி

B] எந்நாட்கண்ணி

C] கிளிக்கண்ணி

D] ஆனந்தக்களிப்பு

3) தாயுமானவர் பிறந்த ஊரானது தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் உள்ளது?

A] விருதுநகர்

B] திருச்சி

C] நாகப்பட்டினம்

D] இராமநாதபுரம்

4) தாயுமானவர் கீழ்க்கண்ட யாரிடம் பணியாற்றினார்?

A] திருச்சியை ஆண்ட ரகுநாதர்

B] மதுரை ஆண்ட சொக்கநாத நாயக்கர்

C] மதுரையை ஆண்ட இராணிமங்கம்மாள்

D] திருச்சியை ஆண்ட விஜய ரகுநாத சொக்கலிங்கர்

5) கீழ்க்கண்டவற்றில் எந்த நூலானாது தெய்வத் தமிழின் இனிமையும் எளிமையும் பொருந்திய செய்யுள் நடையால் ஆனது?

A] பராபரக்கண்ணி

B] தாயுமானவர் திருப்பாடல் திரட்டு

C] கிளிக்கண்ணி

D] ஆனந்தக்களிப்பு

6) கற்பார்க்கு மனத்தூய்மையும், பக்திச்சுவை ஆகியவற்றை ஊட்டும் நூல் எது?

A] தாயுமானவர் திருப்பாடல் திரட்டு

B] பராபரக்கன்ணி

C] கிளிக்கண்ணி

D] எந்நாட்கன்ணி

7) இறைவன் தாயுமானவர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த மலைமீது எழுந்தருளியுள்ளார்?

A] திருநெல்வேவி மலைமீது

B] திருச்செந்தூர் மலைமீது

C] திருச்சி மலைமீது

D] திண்டுக்கல் மலைமீது

8) தாயுமானவர் நினைவு இல்லம் - கீழ்க்கண்ட எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A] நாகப்பட்டினம்

B] நாமக்கல்

C] சென்னை

D] இராமநாதபுரம்

9) தாயுமானவர் அவர்கள் யாரிடம் உபதேசம் பெற்று துறவறம் பூண்டார்?

A] திருமூலர் மரபில் வந்த மௌனகுரு

B] சம்பந்தர் மரபில் வந்த மௌனகுரு

C] இறைவன் அருள் பெற்ற மௌனகுரு

D] தாயுமானவர் மரபை சேர்ந்த மௌகுரு

10) தாயுமானவர் அவர்கள் துறவறம் பூண்ட ஆண்டு எது?

A] 1735 - 30 வது அகவை

B] 1739 - 34 வது அகவை

C] 1736 - 31 வது அகவை

D] 1734 - 29 வது அகவை

11) தாயுமானவர் திருச்சி ஆண்ட நாயக்கரிடம் மற்றும் அவர் மனைவி இராணி மீனாட்சி ஆட்சியிலும் எந்த பணியை மேற்கொண்டு இருந்தார்?

A] அமைச்சர்

B] அரசு கருவூல காவலர்

C] அரசு கருவூல அலுவலர்

D] அரசு அலுவலர்

12) தாயுமானவர் திருப்பாடல் திரட்டு நூலில் உள்ள தலைப்புகளில் கீழ்க்கண்டவற்றில் தவறான தலைப்பு எது?

A] பராபரக்கண்ணி

B] கிளிக்கண்ணி

C] எந்நாட்கண்ணி

D] ஆனந்தத்தவிப்பு

13) தாயுமானவர் வாழ்ந்த காலம் யாது?

A] 16 ஆம் நூற்றாண்டு

B] 17 ஆம் நூற்றாண்டு

C] 18 ஆம் நூற்றாண்டு

D] 15 ஆம் நூற்றாண்டு

14) தாயுமானவர் திருப்பாடல் திரட்டு நூலின் - சிறப்பு பெயர் யாது?

A] தமிழ் மொழியின் தேவாரம்

B] தமிழ் மொழியின் உபநிடதம்

C] தமிழ் மொழியின் தெய்வத்தன்மை

D] தமிழ் மொழியின் வேதம்

15) தாயுமானவர் திருப்பாடல் திரட்டு - நூலின் நூல் அமைப்பு யாது?

A] 36 தலைப்புக்கள் + 56 பிரிவுகள் + 1452 பாடல்கள்

B] 36 தலைப்புக்கள் + 52 பிரிவுகள் + 1452 பாடல்கள்

C] 34 தலைப்புக்கள் + 52 பிரிவுகள் + 1452 பாடல்கள்

D] 34 தலைப்புக்கள் + 56 பிரிவுகள் + 1452 பாடல்கள்

16) கீழ்க்கண்ட யாருடைய பாடல்களில் உவமைகளும் பழமொழிகளும் மிகுதியாக அவருடைய பாடல்களில் நிறைந்து காணப்படும்?

A] வள்ளலார்

B] பாரதியார்

C] மாணிக்கவாசகர்

D] தாயுமானவர்

17) தாயுமானவர் திரட்டு நூலில் இடம்பெற்றுள்ள பாடல்களில் எத்தனை பாடல் கண்ணிகளாகவும், வெண்பாக்களாகவும் உள்ளன?

A] 770 கண்ணிகள் + 84 வெண்பாக்கள்

B] 773 கண்ணிகள் + 81 வெண்பாக்கள்

C] 771 கண்ணிகள் + 83 வெண்பாக்கள்

D] 771 கண்ணிகள் + 82 வெண்பாக்கள்

18) தாயுமானவர் எழுதிய பாடல்களில் எந்த தலைப்பின் கீழ் அமைந்த பாடல்கள் மிகவும் புகழுடையது?

A] பராபரக்கண்ணி

B] எந்நாட்கண்ணி

C] கிளிக்கண்ணி

D] ஆனந்தக்களிப்பு

19) வள்ளலாரும், பாரதியாரும் எளிய கவிதைகள் பாட முன்னோடியாகத் திகழ்ந்தவர் யார்?

A] கடுவெளிச் சித்தர்

B] தாயுமானவர்

C] மௌனகுரு

D] கேடிலியப்பர்

20) தமிழில் மெய்ப்பொருள் பற்றி புகழ்பெற்ற பாடல்களை இயற்றியவர் யார்?

A] பாரதியார்

B] வள்ளலார்

C] தாயுமானவர்

D] பாரதிதாசன்

21) முத்தே பவளமே மற்றும் கண்ணியும் கண்ணே கருத்தேயெண் - எனத் தொடங்கும் கண்ணியானது பராபரக்கண்ணி என்னும் நூலில் கீழ்க்கண்ட எத்தனையாவது பாடலாக அமைந்துள்ளன?

A] 1 மற்றும் 2 வது கண்ணிகள்

B] 10 மற்றும் 11 வது கண்ணிகள்

C] 20 மற்றும் 21 வது கண்ணிகள்

D] 50 மற்றும் 51 வது கண்ணிகள்

22) உபநிடதக் கருத்துக்களை தமிழில் மிகுதியாக சொன்னவர் யார்?

A] தாயுமானவர்

B] இராமலிங்க வள்ளலார்

C] திரு.வி.க

D] பாரதிதாசன்

23) தாயுமானவர் திருப்பாடல் திரட்டு - நூலின் இடம்பெற்றுள்ள உட்பிரிவுகள் மொத்தம் எத்தனை?

A] 2 உட்பிரிவுகள்

B] 3 உட்பிரிவுகள்

C] 4 உட்பிரிவுகள்

D] 5 உட்பிரிவுகள்

## விடைகள் - வாழ்த்து

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 5 | B | 9 | D | 13 | C | 17 | C |
| 2 | A | 6 | A | 10 | C | 14 | B | 18 | A |
| 3 | C | 7 | C | 11 | C | 15 | A | 19 | B |
| 4 | D | 8 | D | 12 | D | 16 | D | 20 | C |
| 21 | B | 22 | A | 23 | D | | | | |

## 2) திருக்குறள்

1) கீழ்க்கண்ட யாருடைய நட்பானது வளர்பிறைபோல நாளும் வளரும் என திருவள்ளுவர் கூறுகிறார்?

A] அன்புடையவர்

B] அன்பில்லாதவர்

C] பண்புடையவர்

D] அறிவுடையவர்

2) யாருடைய நட்பானது தேய்பிறைபோல நாளும் தேயும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] அன்புடையவர்

B] அன்பில்லாதவர்

C] அறிவிலார்

D] அறிவுடையார்

3) நிறைநீர நீரவர் கேண்மை - என்ற வரியில் நீரவர் என்று வள்ளுவர் யாரை குறிப்பிடுகிறார்?

A] அன்புடையவர்

B] அன்பில்லாதவர்

C] பண்புடையவர்

D] அறிவுடையவர்

4) நல்ல நூல்களின் பொருளை கற்ககற்க இன்பம்தருவதை போல கீழ்க்கண்ட யாருடைய நட்பானது பழகப்பழக இன்பம்தரும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] அன்புடையவர்

B] அன்பில்லாதவர்

C] பண்புடையவர்

D] அறிவுடையவர்

5) அழிவி னவைநீக்கி ஆறுய்த்து - என்ற குறளில் ஆறு என்ற பொருள் கீழ்க்கண்ட எந்த பொருளை குறிக்கிறது?

A] நல்வழி

B] தணி

C] இருகரைகளுக்கு நடுவில் பாயும் நீர்

D] ஓர் எண்

6) நட்புக்கு சிறந்த நிலை - என்று எதுவென்று வள்ளுவர் கூறுகிறார்?

A] அன்பாக இருத்தல்

B] இயலும்போது உதவி செய்தல்

C] நண்பனை நல்வழிப்படுத்துவது

D] பிறரிடம் விட்டுக்கொடுக்காமல் இருப்பது

7) திருக்குறளின் பெருமைக்கும் சிறப்புக்கும் சான்றாக திகழும் நூல் எது?

A] திருவள்ளுவர்மாலை

B] திருக்குறள்மாலை

C] திருவள்ளுவமாலை

D] திருக்குறள்பாமாலை

8) எந்த நாட்டின் அணுதுளைக்காத கிரெம்ளின் மாளிகையில் உள்ள சுரங்கப் பாதுகாப்புப் பட்டகத்தில் திருக்குறள் இடம்பெற்றுள்ளது?

A] இங்கிலாந்து

B] ஈரான்

C] கனடா

D] இரஷ்யா

9) கீழ்க்கண்ட எந்த நாட்டிலுள்ள அருங்காட்சியகத்தில் திருக்குறள், விவிலியத்துடன் வைக்கப்பட்டுள்ளது?

A] இங்கிலாந்து

B] ஈரான்

C] கனடா

D] இரஷ்யா

10) கீழ்க்கண்டவற்றில் வள்ளுவர் கூறிய மக்கள் வாழ்வில் அடையதக்க உறுதிப்பொருள்களில் தவறானது எது?

A] அறம்

B] வீடு

C] இன்பம்

D] பொருள்

11) திருக்குறள் நூலில் எந்தக் குறளை படிக்கும் போது உதடுகள் ஒட்டும்; அதன் பொருளோ இறைவனை பற்றி நிற்கும்?

A] குறள் 352

B] குறள் 355

C] குறள் 350

D] குறள் 322

12) அறம், பொருள், இன்பம் - என முப்பாலும் தப்பாமல் வந்த குறள் எது?

A] குறள் 754

B] குறள் 750

C] குறள் 752

D] குறள் 755

13) ‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’ - என்று திருவள்ளுவரை புகழ்ந்தவர் யார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] ஜி.யூ.போப்

D] பரிமேலழகர்

14) ‘வள்ளுவனை பெற்றதால் புகழ் பெற்றதே புகழ் வையகமே - என்று திருவள்ளுவரை புகழந்தவர் யார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] ஜி.யூ.போப்

D] பரிமேலழகர்

15) திருக்குறள் நூலின் சிறப்பு பெயர்களில் தவறானது எது?

A] உலகப் பொதுமறை

B] வாயுறை வாழ்த்து

C] தமிழ்மறை

D] தெய்வ நூல்

16) கீழ்க்கண்ட எந்தப் பகுதியில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் நூலானது இடம்பெற்றுள்ளது?

A] எட்டுத்தொகை

B] பத்துப்பாட்டு

C] பதினெண்மேற்கணக்கு

D] பதினெண்கீழ்க்கணக்கு

17) யாரிடத்தும் எளிமையாக பழகினால் கீழ்க்கண்ட எந்த நன்னெறியை அடைதல் எளிது என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

A] அன்புடைமை

B] பண்புடைமை

C] படிப்பறிவு

D] நட்புடைமை

18) கீழ்க்கண்ட எந்த இரண்டை கொண்டு பிறருக்கு உதவுதல் வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] அன்பு, அறம்

B] பண்பு, செல்வம்

C] நேர்மை, அறம்

D] நேர்மை, அன்பு

19) அரம்போலும் கூர்மைய ரேனும் - என்ற குறளில் அரம் என்ற சொல்லின் பொருள் யாது?

A] தானம்

B] வாளைக் கூர்மையாக்கும் கருவி

C] தர்மம்

D] இழிவு

20) ஜி.யு.போப் அவர்கள் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட ஆண்டு எது?

A] 1900

B] 1884

C] 1882

D] 1886

21) நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் - எனத் தொடங்கும் திருக்குறளில் கீழ்க்கண்ட எந்த அணியிலக்கணம் இடம்பெற்றுள்ளது?

A] உவமையணி

B] சொற்பொருள் பின்வருநிலையணி

C] வேற்றுமையணி

D] வஞ்சிப்புகழ்ச்சி அணி

22) முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள அணியிலக்கணம் எது?

A] உவமையணி

B] சொற்பொருள் பின்வருநிலையணி

C] வேற்றுமையணி

D] வஞ்சிப்புகழ்ச்சி அணி

விடைகள் - திருக்குறள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 6 | B | 11 | C | 16 | D | 21 | A |
| 2 | C | 7 | C | 12 | A | 17 | B | 22 | B |
| 3 | D | 8 | D | 13 | A | 18 | C | | |
| 4 | C | 9 | A | 14 | B | 19 | B | | |
| 5 | A | 10 | B | 15 | C | 20 | D | | |

## 3) இனியவை நாற்பது

1) 'குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே' - என்ற வரியில் குழவி என்ற சொல்லின் பொருள் யாது?

A] குழந்தை

B] மக்கள்

C] நல்லெண்ணம்

D] நோய்

2) 'மயரிக எல்லராய் மாண்புடையார்ச் சேரும்' - என்ற வரியில் மயரி என்பதன் பொருள் யாது?

A] தலைமுடி

B] மயக்கம்

C] பேசும்

D] வஞ்சகர்

3) சலவரைச் சாரா - என்ற வரியில் சலவர் என்பதன் பொருள் யாது?

A] மற்றொருவர்

B] துணி துவைப்பவர்

C] நிலைபெற்ற உயிர்

D] வஞ்சகர்

4) 'குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே' - எனத் தொடங்கும் இனியவை நாற்பது பாடலை பாடிய புலவர் யார்?

A] பூதஞ்சேந்தனார்

B] கபிலர்

C] ஔவையார்

D] பெருந்தேவனார்

5) 'மலர்தலை ஞாலத்து மன்னுயிக்கெல்லாம்' - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A] இன்னா நாற்பது

B] கார் நாற்பது

C] களவை நாற்பது

D] இனியவை நாற்பது

6) இனியவை நாற்பது என்னும் நூலில் மொத்தம் எத்தனை இனிய சொற்கள் கூறப்பட்டுள்ளன?

A] 122

B] 123

C] 124

D] 126

7) பதினெண்கீழ்கணக்கு நூல் தொகுப்பில் 40 பாடல்கள் கொண்ட நான்கு நூல்களில் இனியவை நாற்பது நூலானது எத்தனையாவது நூலாக அமைந்துள்ளது?

A] முதல் நூல்

B] இரண்டாவது நூல்

C] மூன்றாவது நூல்

D] நான்காவது நூல்

8) இனியவை நாற்பது நூலில் எந்த நான்கு செய்யுள்களில் மட்டும் நான்கு இனியச் சொற்கள் கொண்டு முடிகின்றன?

A] 1, 2, 3, 4

B] 2, 4, 6, 8

C] 1, 3, 5, 7

D] 1, 3, 4, 5

9) 'பெண்ணை இழிவுபடுத்தி நஞ்சாகக் கருதும் வழக்கத்தை முதன் முதலாகக் கூறிய நூல் எது?

A] இன்னா நாற்பது

B] இனியவை நாற்பது

C] களவை நாற்பது

D] கார் நாற்பது

10) 'மலர்தலை ஞாலத்து மன்னுயிக்கெல்லாம்' எனத் தொடங்கும் பாடலானது இனியவை நாற்பது நூலில் எத்தனையாவது பாடலாக அமைந்துள்ளன?

A] 15 வது பாடல்

B] 18 வது பாடல்

C] 20 வது பாடல்

D] 25 வது பாடல்

விடைகள் - இனியவை நாற்பது

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | B | 3 | D | 4 | A | 5 | D |
| 6 | C | 7 | B | 8 | D | 9 | B | 10 | C |

## 4) தமிழ்ப்பசி

1) என்றும் எனக்கு இளமை குறையாத தழிழ் வேண்டும் என்று பாடிய புலவர் யார்?

A] சாலை இளந்திரையன்

B] சிற்பி

C] க.சச்சினாந்தன்

D] பாரதிதாசன்

2) க.சச்சினாந்தன் அவர்கள் தமிழுக்கு உயிராக விளங்க கீழ்க்கண்ட எந்த புலவரின் கவிதை வேண்டும் என்று கூறுகிறார்?

A] கம்பன்

B] கபிலர்

C] பாரதியார்

D] ஔவையார்

3) க.சச்சினாந்தன் அவர்கள் இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எந்த இடத்தில் பிறந்தார்?

A] முள்ளுக்காடு

B] பருத்தித்துறை

C] முட்டுக்காடு

D] யாழ்ப்பாணத்துறை

4) க.சச்சினாந்தன் அவர்கள் ஆழ்ந்த புலமை பெற்ற மொழிகளில் தவறான மொழி எது?

A] தமிழ்

B] ஆங்கிலம்

C] சமஸ்கிருதம்

D] உருது

5) ஆனந்தத்தேன் என்ற நூலானது வெளியிடப்பட்ட ஆண்டு எது?

A] 1955

B] 1953

C] 1954

D] 1952

6) ஆனந்தத்தேன் என்ற நூலானாது கீழ்க்கண்ட எந்த தொகுப்பு நூலாகும்?

A] செய்யுள் தொகுப்பு

B] உரைநடைத் தொகுப்பு

C] இலக்கணத்தொகுப்பு

D] கவிதைத்தொகுப்பு

7) க.சச்சினாந்தன் எழுதிய நூல்களில் தவறான நூல் எது?

A] ஆனந்தத்தேன்

B] அன்னபூரணி

C] குறிஞ்சித்தேன்

D] யாழ்ப்பாணக் காவியம்

8) க.சச்சினாந்தன் அவர்களின் ஆசிரியர் பெயர் யாது?

A] மகாவித்வான் நவநீத கிருட்டின பாரதியார்

B] மகாவித்வான் நவநீத கிருஷ்ணன்

C] மகாவித்வான் சபாபதி முதலியார்

D] மகாவித்வான் நவநீதம் பிள்ளை

9) கீழ்க்கண்ட யாருடைய பாடல்களில் கம்பனின் மிடுக்கையும், பாரதியின் சினப்போக்கையும் ஒருமித்துக் காணலாம்?

A] க.சச்சினாந்தன்

B] பாரதிதாசன்

C] வாணிதாசன்

D] நாமக்கல் கவிஞர்

10) சலவர் - என்ற சொல்லின் எதிர்ச்சொல் யாது?

A] நண்பர்

B] நல்லவர்

C] வஞ்சகர்

D] பகைவர்

விடைகள் - தமிழ்ப்பசி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 3 | B | 5 | C | 7 | C | 9 | A |
| 2 | A | 4 | D | 6 | D | 8 | A | 10 | B |

## 5) திருவள்ளுவமாலை

1) பனையளவு காட்டும் படித்தால் - மனையளகு வள்ளைக் (கு) உறங்கும் வளநாடா! - என்ற வரியில் கீழ்க்கண்ட எந்த விலங்கு இடம்பெற்றுள்ளது?

A] பசு

B] ஆடு

C] கோழி

D] யானை

2) 'தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட' - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] திருக்குறள்

B] திருவள்ளுவ மாலை

C] திருவள்ளுவர் உள்ளம்

D] ஆதி உலா

3) திருவள்ளுவ மாலை நூலில் இடம்பெற்றுள்ள 'தினையளவு போதா சிறுபுல்நீர்' என்ற பாடலானது யாரால் இயற்றப்பட்டது?

A] கம்பர்

B] கபிலர்

C] ஔவையார்

D] பூதஞ்சேந்தனார்

4) கபிலர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று குறிப்பிடப்படுகிறது?

A] கி.பி.மூன்றாம் நூற்றாண்டு

B] கி.பி.எட்டாம் நூற்றாண்டு

C] கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு

D] கி.பி.இரண்டாம் நூற்றாண்டு

5) திருவள்ளுவமாலை நூலில் இடம்பெற்றுள்ள பாடல்கள் மொத்தம் எத்தனை?

A] 54

B] 55

C] 53

D] 51

6) திருவள்ளுவமாலை நூலை பாடிய புலவர்கள் மொத்தம் எத்தனை பேர்?

A] 54

B] 55

C] 53

D] 51

7) தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட - என்ற பாடலானது திருவள்ளுவமாலை நூலில் எத்தனையாவது பாடலாக இடம்பெற்றுள்ளது?

A] 3

B] 5

C] 4

D] 8

8) தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட என்ற பாடலானது கீழ்க்கண்ட எதன் அணுகுமுறையைச் சார்ந்தது?

A] தமிழரின் அணுகுமுறை

B] வாழ்வியல் அணுகுமுறை

C] அறிவியல் அணுகுமுறை

D] மண்ணியல் அணுகுமுறை

விடைகள் - திருவள்ளுவமாலை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | B | 3 | B | 4 | D | 5 | B |
| 6 | C | 7 | A | 8 | C | | | | |

## 6) நளவெண்பா

1) எண்ணற்ற அரக்கர்களைக் கொன்று கறை படிந்த அம்புகளைக் கடல்நீரில் கழுவிய மன்னன் யார்?

A] யதுகுலநாட்டு மன்னன்

B] குருநாட்டு மன்னன்

C] அவந்திநாட்டு மன்னன்

D] அங்கநாட்டு மன்னன்

2) விசும்பு - என்பதன் பொருள் யாது?

A] கடல்

B] வடிக்கப்பட்ட அம்பு

C] வானம்

D] பாம்பு

3) கீழ்க்கண்ட எந்த நாட்டில் வள்ளைக்கொடிகள் நிறைய மலிந்து கிடப்பதாக புகழேந்தி புலவர் குறிப்பிடிகிறார்?

A] யதுகுலநாட்டு மன்னன்

B] குருநாட்டு மன்னன்

C] அவந்திநாட்டு மன்னன்

D] அங்கநாட்டு மன்னன்

4) பிள்ளைக் குருகிரங்கப் பேதப்புள் தாலாட்டும் - என்ற வரியில் இடம்பெற்றுள்ள பிள்ளைக்குருகு என்பதன் பொருள் யாது?

A] பாம்பு

B] ஒருவகை நீர்க்கொடி

C] எருமைக்கன்று

D] நாரைக்குஞ்சு

5) உப்பங்கழியில் கீழ்க்கண்ட எந்த பூக்கள் மலர்வதாக புலவர் குறிப்பிடுகிறார்?

A] முல்லைப் பூக்கள்

B] மருதப்பூக்கள்

C] நெய்தல் பூக்கள்

D] குறிஞ்சி பூக்கள்

6) சூழ்விதி - என்பதன் எதிர்ச்சொல் யாது?

A] நல்வினை

B] தீவினை

C] மணமாலை

D] நற்சிந்தனை

7) கீழ்க்கண்டவற்றில் ஒளிவீசும் முத்துமாலையை அணிந்த வெற்றிவேலனாக யார் குறிப்பிடப்படுகிறார்?

A] வீமராசன்

B] கலிங்கநாட்டு மன்னன்

C] நளன்

D] தேவர்கள்

8) மடநாகு - என்பதன் பொருள் யாது?

A] இளைய பசு

B] இளங்காளை

C] காளை மாடு

D] பசுங்கன்று

9) மழவிடை - என்பதன் பொடுள் யாது?

A] இளைய பசு

B] இளங்காளை

C] காளை மாடு

D] பசுங்கன்று

10) புகழேந்தி புலவர் பிறந்த ஊர் எது?

A] சேரநாட்டின் பொன்விளைந்த களத்தூர்

B] சோழநாட்டின் பொன்விளைந்த களத்தூர்

C] பாண்டியநாட்டின் பொன்விளைந்த களத்தூர்

D] தொண்டைநாட்டின் பொன்விளைந்த களத்தூர்

11) புகழேந்தி புலவர் கீழ்க்கண்ட எந்த மன்னரின் அவைப்புலவாரக சிறப்புற்றிருந்தார்?

A] சேரன் செங்குட்டுவன்

B] வரகுண பாண்டியன்

C] ஆதித்த சோழன்

D] கோப்பெருஞ்சோழன்

12) கீழ்க்கண்ட எந்த நூற்றாண்டு காலத்தில் புகழேந்தி புலவர் வாழ்ந்ததாக கூறப்படுகிறது?

A] கி.பி.பத்தாம் நூற்றாண்டு

B] கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு

C] கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு

D] கி.பி.எட்டாம் நூற்றாண்டு

13) நளவெண்பாவின் முப்பெரும் காண்டங்களில் எந்த காண்டமானது நமது பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது?

A] சுயம்வர காண்டம்

B] கலிநீங்கு காண்டம்

C] கலிதொடர் காண்டம்

D] கலிக் காண்டம்

14) புகழேந்தி புலவரை ஆதரித்த வள்ளல் யார்?

A] சடையப்ப வள்ளல்

B] சந்திரன் சுவர்க்கி

C] வரகுண பாண்டியன்

D] சடையப்ப புலவர்

15) நளனின் வரலாற்றைக் கூறும் வேறு நூல் எது?

A] நைடதம்

B] பெருங்கதை

C] கார் நாற்பது

D] மனோன்மணியம்

16) நளவெண்பா நூலின் நூல் அமைப்பு யாது?

A] 2 காண்டம் + 420 பாடல்கள்

B] 3 காண்டம் + 423 பாடல்கள்

C] 3 காண்டம் + 431 பாடல்கள்

D] 2 காண்டம் + 430 பாடல்கள்

17) புகழேந்தி புலவர் தம்மை ஆதரித்த வள்ளளை எத்தனை பாடல்களுக்கு ஒரு முறை பாடல் அமைத்து தன் வள்ளளை சிறப்பித்து பாடியுள்ளார்?

A] நூல் முழுவதும்

B] 1000 பாடல்கள்

C] 150 பாடல்கள்

D] 100 பாடல்கள்

விடைகள் - நளவெண்பா

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | C | 3 | B | 4 | D | 5 | C |
| 6 | A | 7 | C | 8 | A | 9 | B | 10 | D |
| 11 | B | 12 | B | 13 | A | 14 | B | 15 | A |
| 16 | C | 17 | D | | | | | | |

## 7) விவேகசிந்தாமணி

1) தியங்கியே கிடந்ததைக் கண்டு - என்ற வரியில் இடம்பெற்றுள்ள தியங்கி என்பதன் பொருள் யாது?

A] தேன்

B] மயங்கி

C] நாவல்

D] நிலவு

2) சம்புவின் கனி - என குறிக்கப்படுவது?

A] மாம்பழக்கனி

B] நெல்லிக்கனி

C] அத்திப்பழம்

D] நாவற்பழம்

3) விவேகசிந்தாமணி நூலில் வண்டானது கீழ்க்கண்ட எதற்கு உவமையாக கூறப்படுகிறது?

A] நாவற்பழம்

B] தேன்

C] நிலவு

D] பெண்

4) பறந்தது வண்டா, பழமா? இஃது என்ன வித்தையாக இருக்கிறதே! - என்பது எந்த வாக்கியம்?

A] செய்தி வாக்கியம்

B] கட்டளை வாக்கியம்

C] உணர்ச்சி வாக்கியம்

D] வினா வாக்கியம்

### விடைகள் - விவேகசிந்தாமணி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | D | 3 | A | 4 | C |

## 8) பாரதத்தாய்

1) தாய்மையன் பிறனை - என்பதை பிரித்து எழுதுக?

A] தாய்மை + அன்பு + பிறனை

B] தாய்மை + அன்பின் + தனை

C] தாய்மை + இன் + பிறனை

D] தாய்மை + அன்பு + தனை

2) அசலாம்பிகை அம்மையார் பிறந்த ஊர் எது?

A] இரட்டணை

B] பெருங்களத்தூர்

C] கடலூர்

D] குவளை

3) அசலாம்பிகை அம்மையார் எழுதிய நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறான நூல் எது?

A] ஆத்திச்சூடி வெண்பா

B] திலகர் புராணம்

C] குழந்தைகள் பதிகம்

D] காந்தி புராணம்

4) அசலாம்பிகை அம்மையாரை இக்கால ஔவையார் - என்று பாராட்டியவர் யார்?

A] அண்ணா

B] பாவணர்

C] பெரியார்

D] திரு.வி.க

5) அசலாம்பிகை அம்மையார் எந்த ஊரில் வாழ்ந்து கொண்டிருந்த போது இராமலிங்கசுவாமிகள் சரிதம் என்னும் நூலை இயற்றினார்?

A] இரட்டணை

B] வடலூர்

C] கடலூர்

D] மருதூர்

6) இராமலிங்கசுவாமிகள் சரிதம் என்னும் நூலில் உள்ள பாடல்கள் மொத்தம் எத்தனை?

A] 419

B] 421

C] 411

D] 409

7) அசலாம்பிகை அம்மையார் எழுதிய எந்த நூலில் பாரதத்தாய் என்னும் தலைப்பலான பாடல் இடம்பெற்றுள்ளது?

A] திலகர் புராணம்

B] ஆத்திச்சூடி வெண்பா

C] காந்திபுராணம்

D] குழந்தை சுவாமிகள் பதிகம்

8) காந்திபுராணம் - என்ற நூலில் உள்ள பாடல்கள் மொத்தம் எத்தனை?

A] ஈராயிரத்து முப்பத்து நான்கு

B] ஈராயிரத்து இருபத்து மூன்று

C] ஈராயிரத்து நாற்பத்து இரண்டு

D] ஈராயிரத்து ஐம்பத்து ஐந்து

9) அசலாம்பிகை அம்மையார் அவர்கள் பலகாலம் எந்த ஊரில் வாழ்ந்து வந்தார்?

A] வடலூர்

B] திருப்பாதிரிப்புலியூர்

C] இரட்டணை

D] திருப்பாதிரிகூடலூர்

10) அசலாம்பிகை அம்மையார் கீழ்க்கண்ட யாரை தாய்மையன் பிறனை என்று குறிப்பிடுகிறார்?

A] பாரதத்தாய்

B] இராமலிங்கனார்

C] தொண்டர்கள்

D] காந்தியடிகள்

விடைகள் - பாரதத்தாய்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | A | 3 | C | 4 | D | 5 | B |
| 6 | D | 7 | C | 8 | A | 9 | B | 10 | D |

## 9) திருமந்திரம்

1) சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறையாக அமைந்துள்ள நூல் எது?

A] திருவாசகம்

B] திருக்கோவை

C] தேவாரம்

D] திருமந்திரம்

2) திருமந்திரம் - என்னும் நூலின் வேறுபெயர் யாது?

A] தமிழ் மூவாயிரம்

B] தமிழ் உபநிடதங்கள்

C] தமிழ் தேவாரம்

D] தெய்வத்தன்மை பெற்ற நூல்கள்

3) உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே - என்ற வரிக்கொண்ட பாடலானது திருமந்திரம் நூலில் எத்தனையாவது தந்திரத்தில் இடம்பெற்றுள்ளது?

A] முதல் தந்திரம்

B] இரண்டாவது தந்திரம்

C] மூன்றாவது தந்திரம்

D] நான்காவது தந்திரம்

4) உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே - என்ற வரி கொண்ட பாடலானது மூன்றாம் தந்திரத்தில் எத்தனையாவது பாடலாக அமைந்துள்ளது?

A] 720

B] 724

C] 726

D] 723

5) திருமந்திரம் நூலில் இடம்பெற்றுள்ள புகழ்பெற்ற தொடர் எது?

A] நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வகையகம்

B] அன்பும் சிவமும் இரண்டென்ப அறிவிலார்

C] உடம்பார் அழியின் உயிரார் அழிவர்

D] ஒன்றே குலன் ஒருவனே தேவன்

6) திருமந்திரம் நூலின் நூல் அமைப்பு யாது?

A] 9 தந்திரம் + 232 அதிகாரம் + 3000 பாடல்கள்

B] 6 தந்திரம் + 233 அதிகாரம் + 3001 பாடல்கள்

C] 8 தந்திரம் + 233 அதிகாரம் + 3001 பாடல்கள்

D] 7 தந்திரம் + 230 அதிகாரம் + 3000 பாடல்கள்

7) பன்னிரு திருமுறை வரிசையில் 1 முதல் 9 வரை வரிசையில் இடம்பெற்ற திருமுறை நூல்கள் கூறுவது?

A] திருமந்திர சாஸ்திரம்

B] தோத்திரம்

C] பிரபந்தம்

D] புராண வகை

8) பன்னிரு திருமுறை வரிசையில் 10 வது வரிசையில் இடம்பெற்ற திருமுறை நூலானது எதைக் கூறுகிறது?

A] தோத்திரம்

B] பிரபந்தம்

C] திருமந்திரத்தின் சாஸ்திரம்

D] புராணவகை சார்ந்தது

9) பன்னிரு திருமுறை வரிசையில் 11 வது வரிசையில் இடம்பெற்ற திருமுறை நூலானது எதைக் கூறுகிறது?

A] தோத்திரம்

B] பிரபந்தம்

C] திருமந்திரத்தின் சாஸ்திரம்

D] புராணவகை சார்ந்தது

10) பன்னிரு திருமுறை வரிசையில் 12 வது வரிசையில் இடம்பெற்ற திருமுறை நூலானது எதைக் கூறுகிறது?

A] தோத்திரம்

B] பிரபந்தம்

C] திருமந்திரத்தின் சாஸ்திரம்

D] புராணவகை சார்ந்தது

விடைகள் - திருமந்திரம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 2 | A | 3 | C | 4 | B | 5 | D |
| 6 | A | 7 | B | 8 | C | 9 | B | 10 | D |

## 10) தேம்பாவணி

1) வீரமாமுனிவரின் இயற்பெயர் யாது?

A] கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி

B] கான்ஸ்டாண்டின் போபெஸ்கி

C] கொண்டம் போபெஸ்கி

D] ஜோசப் கான்ஸ்டாண்டின் பெஸ்கி

2) வீரமாமுனிவர் பிறந்த ஊர் யாது?

A] பிரான்சு

B] இத்தாலி

C] இங்கிலாந்து

D] ஜெர்மனி

3) வீரமாமுனிவர் கீழ்க்கண்ட எந்த வயதின் போது தமிழகம் வந்தடைந்தார்?

A] 19

B] 30

C] 25

D] 28

4) வீரமாமுனிவர் இயற்றிய நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறான நூல் எது?

A] ஞானோபதேசம்

B] தொன்னூல் விளக்கம்

C] திருக்காவலூர்க் கலம்பகம்

D] சித்தேரியம்மாள் அம்மானை

5) வீரமாமுனிவரின் எந்த நூலானது கிறித்துவச் சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என அழைக்கப்படுகிறது?

A] ஞானோபதேசம்

B] தொன்னூல் விளக்கம்

C] தேம்பாவணி

D] வேதியர் ஒழுக்கம்

6) தேம்பாவணி என்ற சொல்லை தேம்பா + அணி என பிரித்தால் கீழ்க்கண்ட எந்த பொருள் கிடைக்கிறது?

A] வாடாத மாலை

B] தேன்போன்ற இனிய பாடல்களான மாலை

C] இலத்தீன் மொழி கொண்ட பாடல்கள்

D] வாடாத பாமாலை

7) தேம்பாவணி என்ற நூலை கீழ்க்கண்டவாறு எவ்வாறு பிரித்தால் அதன் பொருள் தேன்போன்ற இனிய பாடல்களான மாலை என பொருள்படும்?

A] தேம்பா + அணி

B] தேன் + பா + அணி

C] தேன் + பாவணி

D] தேன் + ப் (ஆ) + அணி

8) தேம்பாவணி நூலின் நூல் அமைப்பு யாது?

A] 3 காண்டங்கள் + 34 படலங்கள் + 3615 பாடல்கள்

B] 3 காண்டங்கள் + 36 படலங்கள் + 3610 பாடல்கள்

C] 3 காண்டங்கள் + 36 படலங்கள் + 3615 பாடல்கள்

D] 3 காண்டங்கள் + 33 படலங்கள் + 3615 பாடல்கள்

9) நகைசெய் தன்மையி னம்பெழீ - எனத் தொடங்கும் தேம்பாவணி பாடலானது கீழ்க்கண்ட எந்த படலத்தில் அமைந்துள்ளது?

A] வளன் செனித்த படலம்

B] மகிழ்வினைப் படலம்

C] மகன் நேர்ந்த படலம்

D] மகவருள் படலம்

10) மகவருள் படலமானது தேம்பாவணி நூலில் எத்தனையாவது காண்டத்தில் எத்தனையாவது படலமாக இடம்பெற்றுள்ளது?

A] முதற்படலம் - 10 வது படலம்

B] இரண்டாம் படலம் - 5 வது படலம்

C] மூன்றாம் படலம் - 12 வது படலம்

D] நான்காம் படலம் - 10 வது படலம்

11) வீரமாமுனிவருக்கு தமிழ் கற்பித்த புலவர் யார்?

A] சுப்ரமணிய கவிராயர்

B] சுப்ரதீபக் கவிராயர்

C] சந்திரன் சுவர்க்கி

D] சுப்புரத்தின கவிராயர்

12) இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசை மாமுனிவரை பாட்டுடைத் தலைவராக கொண்டு வீரமாமுனிவர் இயற்றிய நூல் எது?

A] தேம்பாவணி

B] வேத விளக்கம்

C] திருக்காவலூர்க் கலம்பகம்

D] கொடுந்தமிழ் இலக்கணம்

13) தைரியநாதசாமி - என்பது கீழ்க்கண்ட எந்த மொழிச் சொல்லாகும்?

A] தமிழ்ச்சொல்

B] உருதுச்சொல்

C] வடமொழிச்சொல்

D] இலத்தீன்மொழிச்சொல்

14) வீரமாமுனிவர் அவர்கள் தமிழகம் வந்த ஆண்டு எது?

A] கி.பி.1701

B] கி.பி.1710

C] கி.பி.1747

D] கி.பி.1713

15) வீரமாமுனிவர் அவர்கள் இறந்த இடமான அம்பலக்காடு உள்ள மாநிலம் எது?

A] தமிழ்நாடு

B] புதுச்சேரி

C] ஆந்திரா

D] கேரளா

16) தமிழ் இலக்கிய இலக்கணங்களை கவிதை வடிவில் இருந்து உரைநடையாக மாற்றியவர் புலவர் யார்?

A] வீரமாமுனிவர்

B] பாரதியார்

C] சூரியநாராயண சாஸ்திரி

D] தேவநேயப்பாவணர்

17) தமிழில் அமைந்த காப்பியங்களையே, தமிழைத் தாய்மொழியாக கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்ட நூல் எது?

A] மனோன்மணியம்

B] தேம்பாவணி

C] சதுரகராதி

D] தொன்னூள் விளக்கம்

18) திருக்குறளின் எந்த இரு பாக்களை வீரமாமுனிவர் அவர்கள் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார்?

A] அறத்துப்பால் & பொருட்பால்

B] அறத்துப்பால் & இன்பத்துப்பால்

C] பொருட்பால் & இன்பத்துப்பால்

D] மொழி பெயர்க்கவில்லை

19) வீரமாமுனிவர் அவர்கள் பரமார்த்த குரு கதையை முதன் முறையாக எந்த ஆண்டு எங்கு அச்சிட்டு வெளியிட்டார்?

A] கி.பி.1710 - தமிழ்நாடு

B] கி.பி.1715 - அம்பலக்காடு

C] கி.பி.1720 - கொச்சி

D] கி.பி.1728 - புதுவை

விடைகள் - தேம்பாவணி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 5 | C | 9 | D | 13 | C | 17 | B |
| 2 | B | 6 | A | 10 | A | 14 | B | 18 | A |
| 3 | B | 7 | B | 11 | B | 15 | D | 19 | D |
| 4 | D | 8 | C | 12 | A | 16 | A | | |

## 11) கம்பராமாயணம்

1) தாதுகு சோலை தோறும் - என்ற சொல்லில் தாது என்பதன் பொருள் யாது?

A] மகரந்தம்

B] மலர்

C] குளம்

D] பாக்கு

2) கீழ்க்கண்ட எந்த நதியானது மகரந்தப்பொடிகளைச் சிந்தும் சோலைகளை வளப்படுத்தியும், சண்பக வளங்களைக் கடந்தும், கமுகத்தோட்டங்களில் பாய்ந்தும் செல்வதாக கம்பர் கூறுகிறார்?

A] கங்கை

B] யமுனை

C] சரயு

D] தபதி

3) கமுகம் என்பது கீழ்க்கண்ட எந்த மரத்தைக் குறிக்கும் சொல்லாகும்?

A] சண்பக மரம்

B] பாக்கு மரம்

C] தேக்கு மரம்

D] சந்தன மரம்

4) கம்பர் பிறந்த ஊர் யாது?

A] பொன்விளைந்த களத்தூர்

B] திருநாவலூர்

C] திருப்பெழுந்தூர்

D] தேரழுந்தூர்

5) கம்பரை போற்றிய வள்ளல் யார்?

A] சந்திரன் சுவர்க்கி

B] சடையப்ப வள்ளல்

C] பெருந்தேவனார்

D] சடையப்ப புலவர்

6) கம்பர் இயற்றிய நூல்களில் தவறானது எது?

A] சடகோபரந்தாதி

B] சிலையெழுபது

C] கோமதி அந்தாதி

D] திருக்கை வழக்கம்

7) கதை மாந்தரின் வடசொற் பெயர்களைத் தொல்காப்பிய நெறிப்படி தமிழ்ப்படுத்திய பெருமைக்குரியவர் யார்?

A] வீரமாமுனிவர்

B] கம்பர்

C] வால்மீகி

D] கபிலர்

8) தாதுகு சோலை தோறும் - என்ற வரிக்கொண்ட பாடலானது கம்பராமயண நூலில் எந்த காண்டத்தில் அமைந்துள்ளது?

A] பாலகாண்டம்

B] அயோத்திய காண்டம்

C] ஆரணிய காண்டம்

D] சுந்தர காண்டம்

9) சரயு நதி பற்றி பால காண்டத்தில் கீழ்க்கண்ட எந்தப் படலத்தில் கம்பர் கூறுகிறார்?

A] நகரப் படலம்

B] வரலாற்றுப் படலம்

C] அரசியற் படலம்

D] ஆற்றுப்படலம்

10) பாலகாண்டத்தில் காணப்படும் படலங்கள் மொத்தம் எத்தனை?

A] 24 படலங்கள்

B] 22 படலங்கள்

C] 13 படலங்கள்

D] 18 படலங்கள்

11) பாலகாண்டத்தில் உள்ள ஆற்றுப்படலமானது எத்தனையாவது படலமாக அமைந்துள்ளது?

A] 10 வது படலம்

B] 22 வது படலம்

C] 12 வது படலம்

D] 01 வது படலம்

12) சரயு நதியானது தற்போது இந்தியாவின் எந்த மாநிலத்தில் பாயும் நதியாகும்?

A] மத்தியப்பிரதேசம்

B] ஆந்திரப்பிரதேசம்

C] உத்திரப்பிரதேசம்

D] அருணாச்சல பிரதேசம்

## விடைகள் - கம்பராமாயணம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | C | 3 | B | 4 | D | 5 | B |
| 6 | C | 7 | B | 8 | A | 9 | D | 10 | B |
| 11 | D | 12 | C | | | | | | |

## 12) விழுதும் வேரும்

1) விழுதும் வேரும் என்ற தலைப்பின் கீழ் உள்ள பாடல்களை இயற்றிய ஆசிரியர் யார்?

A] பாரதியார்

B] திரு.வி.க

C] பாரதிதாசன்

D] அப்துல் ரகுமான்

2) தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்த புலவர் யார்?

A] அண்ணா

B] நாமக்கல் கவிஞர்

C] மு.மேத்தா

D] பாரதிதாசன்

3) பாரதிதாசன் இயற்றிய எந்த நூலில் விழுதும் வேரும் என்னும் தலைப்பின்கீழ் நம் பாடப்பகுதி பாடல் இடம்பெற்றுள்ளது?

A] அழகின் சிரிப்பு

B] தமிழியக்கம்

C] கண்ணகி புரட்சிக்காப்பியம்

D] குறிஞ்சித்திட்டு

4) பாரதிதாசன் அவர்கள் எந்த ஆண்டின் போது யாரால் புரட்சிக்கவி என்று அழைக்கப்பட்டார்?

A] அண்ணா - 1946

B] ஈ.வெ.ராமசாமி - 1947

C] திரு.வி.க - 1923

D] பாரதியார் - 1903

### விடைகள் - விழுதும் வேரும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | D | 3 | A | 4 | A |

## 13) திருவருட்பா

1) வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன் - என்று பாடிய புலவர் யார்?

A] வள்ளலார்

B] பாரதிதாசன்

C] பள்ளியகரம் ந.கந்தசாமி

D] பாரதியார்

2) வாடிய பயிரை கண்டபோ தெல்லாம் - என்ற பாடலானது கீழ்க்கண்ட எந்த தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ளது?

A] பிள்ளைச் சிறு விண்ணப்பம்

B] பிள்ளைப் பெருவிண்ணப்பம்

C] அருட்பெருஞ்சோதி அகவல்

D] அருட்பெருஞ்சோதி அட்டகம்

3) திருவருட்பாவில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது?

A] 5820

B] 5816

C] 5818

D] 5814

(திருவருட்பா நூல் மற்றும் ஆசியர் பற்றிய குறிப்பும் ஏற்கனவே ஆறாம் வகுப்பில் கூறியுள்ளேன்)

விடைகள் - திருவருட்பா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | B | 3 | C |

## 14) வில்லிபாரதம்

1) வான்பெற்ற நதிகமழ்தாள் - என்ற வரிப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] பாலபாரதம்

B] கம்பராமாயணம்

C] திருவருட்பா

D] வில்லிபாரதம்

2) வில்லிபாரதம் என்ற நூலை எழுதிய புலவர் யார்?

A] வில்லிபுத்தூரார்

B] வியாசர்

C] கம்பர்

D] கபிலர்

3) தேன்கமழும் துளசி மாலையும், சந்தனமும் அணியப்பெற்ற நின் திருத்தோள்கள் கொண்டவர் யார்?

A] கண்ணன்

B] கன்னன்

C] தர்மர்

D] திருதாஷ்டிரன்

4) துழாய் அலங்கல் - என்பதன் பொருள் யாது?

A] சந்தனம் மாலை

B] காசு மாலை

C] துளசி மாலை

D] வேப்பிலை மாலை

5) களபம் என்பதன் பொருள் யாது?

A] அம்பு

B] தசை

C] சந்தனம்

D] துளசி

6) பகழி என்பதன் பொருள் யாது?

A] அம்பு

B] வில்

C] ஆழி

D] தோள்

7) வில்லிபுத்தூராரை ஆதரித்த மன்னர் யார்?

A] சந்திரன் சுவர்க்கி

B] வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான்

C] வக்கபாகையை ஆண்ட விஜயரகுநாதர்

D] சடையப்ப வள்ளல்

8) வில்லிபாரத நூலின் நூல் அமைப்பு யாது?

A] பத்து பருவம் + 4300 பாடல்கள்

B] பத்து பருவம் + 4320 பாடல்கள்

C] பத்து பருவம் + 4350 பாடல்கள்

D] பத்து பருவம் + 4250 பாடல்கள்

9) வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன் - எனத் தொடங்கும் பாடலானது வில்லிபாரத நூலில் கீழ்க்கண்ட எந்தப் பருவத்தில் இடம்பெற்றுள்ளது?

A] ஆரண்ய பருவம்

B] துரோண பருவம்

C] சல்லிய பருவம்

D] கன்ன பருவம்

10) கன்ன பருவமானது வில்லிபாரத நூலில் எத்தனையாவது பருவமாக இடம்பெற்றுள்ளது?

A] ஐந்தாவது பருவம்

B] எட்டாவது பருவம்

C] ஆறாவது பருவம்

D] நான்காவது பருவம்

விடைகள் - வில்லிபாரதம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 2 | A | 3 | A | 4 | C | 5 | C |
| 6 | A | 7 | B | 8 | C | 9 | D | 10 | B |

## 15) யார் கவிஞன்?

1) யார் கவிஞன் என்ற தலைப்பில் கவிதை எழுதிய புலவர் யார்?

A] பாரதிதாசன்

B] முடியரசன்

C] வாணிதாசன்

D] துரைமாணிக்கம்

2) முடியரசனின் இயற்பெயர் யாது?

A] துரைமாணிக்கம்

B] துரைராசு

C] துரைரத்தினம்

D] ராசுத்துரை

3) முடியரசன் பிறந்த ஊர் யாது?

A] சிறியகுளம்

B] இரட்டணை

C] பெரியகுளம்

D] திருவாதவூர்

4) முடியரசன் இயற்றிய நூல்களில் தவறான நூல் எது?

A] பூங்கொடி

B] காவியப்பாவை

C] வீரகாவியம்

D] பூக்கொடி

5) முடியரசனுக்கு கீழ்க்கண்ட யாரல் கவியரசு என்ற பட்டம் அளிக்கப்பட்டது?

A] அண்ணா

B] பாரதிதாசன்

C] குன்றக்குடி அடிகளார்

D] பெரியார்

6) பாரதிதாசன் பரம்பரைத் தலைமுறைக் கவிஞருள் மூத்தக் கவிஞர் யார்?

A] முடியரசன்

B] பாரதிதாசன்

C] வாணிதாசன்

D] வல்லிக்கண்ணன்

7) முடியரசன் நூல்களில் கீழ்க்கண்டவற்றில் எந்த நூலானது தமிழக அரசு விருது பெற்றது?

A] காவியப்பாவை

B] வீரகாவியம்

C] பூங்கொடி

D] முடியரசன் கவிதைகள்

8) எந்த ஆண்டு பூங்கொடி நூலானது தமிழக அரசின் விருதைப் பெற்றது?

A] 1955

B] 1963

C] 1962

D] 1966

9) யாருடைய கவிதைகளை சாகித்ய அகடாமி இந்தியிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது?

A] வல்லிக்கண்ணன்

B] முடியரசன்

C] நா.காமராசன்

D] குழந்தை அழ.வள்ளியப்பா

விடைகள் - யார் கவிஞன்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | B | 3 | C | 4 | D | 5 | C |
| 6 | A | 7 | C | 8 | D | 9 | B | | |

## 16) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

1) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என்னும் நூலை எழுதியவர் யார்?

A] ஒட்டக்கூத்தர்

B] பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

C] குமரகுருபரர்

D] குன்றக்குடி அடிகளார்

2) முத்துக்குமார பெருமான் அவர்கள் கீழ்க்கண்ட யாருடைய மகன் என்று குமரகுருபரர் கூறுகிறார்?

A] கலைமகள்

B] மலைமகள்

C] திருமகள்

D] தனமகள்

3) வளங்கள் பொருந்திய வைத்தீசுவரன் கோவிலில் கீழ்க்கண்ட யார் எழுந்தருளிப்பதாக புலவர் குறிப்பிடுகிறார்?

A] சிவன்

B] விஷ்ணு

C] கணபதி

D] குமரர்

4) அமுதகரணம் - என்பதன் பொருள் யாது?

A] குளிர்ச்சியான ஒளி

B] அளவில்லாத ஒளி

C] வெப்பமான ஒளி

D] அறிவு ஒளி

5) மதுரம் - என்பதன் பொருள் யாது?

A] தேன்

B] இனிமை

C] கடல்

D] கதிரவன்

6) கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே - என்ற வரியில் இடம்பெற்றுள்ள கழுவு துகளர் என்பதன் பொருள் யாது?

A] மாசற்றவர்

B] குற்றமுள்ளவர்

C] குற்றமற்றவர்

D] மாசுடைய

7) கதிரவன் வழிபட்ட இடமாக கீழ்க்கண்ட எந்த இடம் குறிப்பிடப்படுகிறது?

A] மயிலாப்பூர் கோவில்

B] வைத்தீசுவரன் கோவில்

C] சிதம்பரம் நடராாசர் கோவில்

D] நெல்லையப்பர் கோவில்

8) குமரகுருபரர் பிறந்த ஊர் யாது?

A] திருவைகுண்டம்

B] வேதாரண்யம்

C] வேளாங்கண்ணி

D] பெரம்பலூர்

9) குமரகுருபரர் இயற்றிய நூல்களில் தவறான நூல் எது?

A] கந்தர் கலிவெண்பா

B] மதுரைக் கலம்பகம்

C] நீதிநூல்களின் விளக்கம்

D] திருவாரூர் மும்மணிக்கோவை

10) கீழ்க்கண்ட எந்த இரு இடங்களில் குமரகுருபரர் அவர்கள் தம்பெயரால் மடம் நிறுவி உள்ளார்?

A] திருப்பூர், காசி

B] காசி, திருப்பனிந்தாள்

C] திருவைகுண்டம், திருப்பனிந்தாள்

D] காசி, இராமேஸ்வரம்

11) குமரகுருபரர் அவர்கள் இறைவனடி சேர்ந்த இடம் எது?

A] திருவைகுண்டம்

B] திருப்பனிந்தாள்

C] புள்ளிருக்குவேளூர்

D] காசி

12) உலகு குளிர எமது மதியில் ஒழுகும் அமுத கிரணமே - எனத் தொடங்கும் நம் பாடப்பகுதி பிள்ளைத்தமிழ் பாடலானது கீழ்க்கண்ட எந்தப் பருவத்தில் இடம்பெற்றுள்ள பாடலாகும்?

A] காப்பு

B] செங்கீரை

C] சப்பாணி

D] வருகை

13) வருகைப்பருவமானது இருபாற் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவாக எத்தனையாவது பருவமாக அமைந்துள்ளன?

A] இரண்டாம் பருவம்

B] ஆறாவது பருவம்

C] ஐந்தாவது பருவம்

D] நான்காவது பருவம்

14) வருகைப்பருவமானது குழந்தையின் எத்தனையாவது திங்களில் நடைபெறும் பருவமாகும்?

A] மூன்றாம் திங்கள்

B] ஏழாவது திங்கள்

C] பதினொன்றாம் திங்கள்

D] பதிமூன்றாம் திங்கள்

15) கீழ்க்கண்ட எந்த பருவமானது தளர்நடையிட்டு வரும் குழந்தையின் சிறப்புகளைக் எடுத்துக்கூறி மனங்குளிர அழைக்கும் பாடல்களாக அமைந்துள்ளது?

A] செங்கீரை

B] முத்தம்

C] வருகை

D] அம்புலி

16) பிள்ளைத்தமிழில் காப்பு பருவத்தில் பெரும்பாலும் வேண்டப்படும் தெய்வம் யாது?

A] சிவன்

B] திருமால்

C] பிரம்மன்

D] குமரன்

17) பிள்ளைத்தமிழின் இருபாலருக்கும் பொதுவாக உள்ள பருவங்களில் கீழ்க்கண்ட எந்த பருவம் பாடுவது கடினம் என்று கூறப்படுகிறது?

A] செங்கீரை

B] முத்தம்

C] வருகை

D] அம்புலி

விடைகள் - முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 5 | B | 9 | C | 13 | B | 17 | D |
| 2 | B | 6 | C | 10 | B | 14 | D | | |
| 3 | D | 7 | B | 11 | D | 15 | C | | |
| 4 | A | 8 | A | 12 | D | 16 | B | | |

நன்றி- பழனி முருகன்